00124

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 5

இறுதிப் பரீட்சை- 2021/2022

**LLU5811/LWU3314 – சுற்றாடல் சட்டம்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 24 ஜனவரி 2023 காலம் : மு.ப 9.30 – பி.ப 12.30

தெளிவற்ற கையெழுத்துகளுக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

அதிகாரமளிக்கப்படாத ஆவணங்கள், கையடக்க தொலைபேசி மற்றும் ஏனைய ஏதேனும் இலத்திரனியல் சாதனத்தை பரீட்சை மண்டபத்தில் அல்லது உமது உடைமையில் வைத்திருத்தல் பரீட்சை குற்றம் ஒன்றாகும்.

பகுதி I இல் இருந்து 1 வது வினாவுக்கும் பகுதி 2 இல் இருந்து மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி I - இது கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாவாகும் (40 புள்ளிகள்)

1. இராவணதேசம் என்ற நாட்டின் மேற்கு கரையோரத்தில் திவயின என்று அழைக்கப்படும் தீவு 600 மக்கள் தொகைக்குரிய ஒரு வாழ்விடமாகும். அவர்களுடைய வாழ்வாதாரம் மீன்பிடி மற்றும் தென்னை பயிர்ச்செய்கை இரண்டையும் உள்ளடக்கியது. அண்மைய வருடங்களில் இங்குள்ள மக்கள் விருந்தினர்களை திமிங்கிலங்களை பார்வையிட அழைத்துச் செல்வதன் மூலம் இயற்கை சுற்றுலா ஊடாக அதிகளவிலான பணத்தை சம்பாதிக்க ஆரம்பித்துள்ளனர். ரம்சார் இடமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு பெரிய ஏரியில் வாழ்விடத்தை கொண்டுள்ள பறவைகள் கூட்டத்தை பார்வையிட வருகை தருகின்ற உல்லாச பிரயாணிகளுக்கு தமது வீடுகளை வாடகைக்கும் இம்மக்கள் வழங்கி வருகின்றனர். வருடத்தில் சில காலப்பகுதிகளில் புலம் பெயர்ந்து வரும் உயிரினங்களுக்கும் இந்த ஏரி வாழ்விடமாக அமைந்துள்ளது. இராவணதேசத்தினுடைய விலங்கின மற்றும் தாவர இனங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த ஏரி ஒரு இயற்கை ஒதுக்கிடமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

   இராவணதேசத்தின் மேற்கு கரையோரத்தில் அண்மையில் டொல்பின்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட உயிரினங்களில் ஒன்று உலகில் மிக அருகிவருகின்ற ஒரு சில நூற்றுக்கணக்கான உயிரினங்களில் ஒன்றாகும். இத்தகைய மிருகங்களின் இனப்பெருக்கத்தளம் ஒன்றாக இந்த பிரதேசம் இருந்து வருகிறது என அறியப்பட்டது. 2021 இல், இராவணதேசத்தில் விலங்கின மற்றும் தாவர இனங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இம் மிருகங்களை பாதுகாப்பதற்காக இப்பிரதேசம் கரையோர சரணாலயமொன்றாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஒரு சில மாதங்களுக்கு முன்பு ஒரு வெளிநாட்டு சுரங்க அகழ்வு கம்பனி திவயினவில் பெரும் அளவிலான இல்மனைட் இருப்பதை கண்டுபிடித்தது. இல்மனைட்டை அகழ்வதற்காக இக்கம்பனியுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட அரசாங்கம் உத்தேசிக்கிறது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஒன்று இத்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்படாத போதிலும் பின்வரும் விடயங்களை குறிப்பிட்ட பொருத்தமான அரசாங்க அதிகார சபைகள் அறிக்கையொன்றை வெளியிட்டன:

(அ) இராவணதேசம் வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதால், சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) இருந்து கடன் ஒன்று பெறப்படும் வரை நாடு நிலைத்திருக்க வருவாய் தேவைப்படுவதால் இத்திட்டம் அத்தியாவசியாகும்.

(ஆ) இல்மனைட், திவயினவில் மாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையால் இத்திட்டத்திற்கு சாத்தியமான வேறு மாற்று வழிகள் இல்லை.

(இ) ஆராய்ச்சி மற்றும் அகழ்வுக்காக தனியார் நிலங்களை அணுகுதல் காணி உரிமையாளர்களின் அனுமதியுடன் நடைபெறும்.

(ஈ) மீன்பிடி மற்றும் உல்லாச பிரயாண கைத்தொழில் போன்ற நிட்சயமற்ற வாழ்வாதாரங்களை விட இத்திட்டம் பிரதேசவாசிகளுக்கு நிலையான தொழில் வாய்ப்புக்களை வழங்கும்.

(உ) நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு மிக முக்கியமாக இத்திட்டம் அமைவதால் இத்திட்டத்திற்கரிய EIA வர்த்தமானி ஒன்றின் மூலம் விலக்களிக்கப்படும்.

நீர் கற்றுக் கொண்ட சுற்றாடல் சட்ட எண்ணக்கருக்கள், மனித உரிமைகள் எண்ணக்கருக்கள், நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் நியதிச் சட்டங்கள் என்பவற்றின் பின்னணியில் இவ்வினாவில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகளை ஆராய்க. இராவணதேசத்தினுடைய அரசியலமைப்பு மற்றும் அனைத்து சட்டங்களும் இலங்கையை ஒத்தது என நீர் அனுமானிக்கலாம்.

**பகுதி 2 - இப்பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்கு விடை தருக – அனைத்து வினாக்களும் 20 புள்ளிகளுக்குரியது.**

2. *சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றுக்கிடையிலான இடைத் தொடர்பின் சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டங்களிலான அங்கீகாரம், தீர்ப்புச் சட்டத்தின் முக்கியமான தொகுதி ஒன்று உருவாவதற்கு வழிசமைத்துள்ளது. முக்கியமான சுற்றாடல் பிரச்சினைகள் எவை என்பது மீதான வழக்குகள் அடிக்கடி தேசிய அரசியலமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படைகள் மீதமைந்துள்ளது. மாறாக, சுற்றாடல் வழக்குகள் மனித உரிமைகளை விரிவாக்குவதிலும் விருத்தி செய்வதிலும் முக்கிய இடம் பெற்றுள்ளன.*

   இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் நீதிமன்றங்களினால் தீர்க்கப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் உமது விடையை விளக்கி மேலே தரப்பட்ட கூற்றை ஆராய்க.

3. இராமபுர பிரதேச சபை, பிரதேசவாசிகளிடமிருந்து சேகரிக்கின்ற குப்பைகளை நகரத்தின் புற எல்லையில் அமைந்துள்ள பயன்படுத்தப்படாத வயலில் கொட்டி வருகிறது. இந்த

குப்பைக் கூழங்கள் காலப்பகுதியில் அதிகரித்து வந்தமையினால் மாடுகள் மற்றும் பன்றிகள் உட்பட பல்வேறுபட்ட மிருகங்கள் தமது உணவுக்காக இந்த குப்பைக் கிடங்கிற்கு வருகை தர ஆரம்பித்தன. இந்த இடத்தில் இருந்து உணவு பெற்றுக் கொள்வதற்காக அண்மைக்காலமாக காட்டு யானைகளும் வரத்தொடங்கியுள்ளன.

இந்த பகுதியில் வாழ்கின்ற மக்கள் குப்பை கிடங்கினால் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். குப்பைகளில் இருந்து வரும் துர்நாற்றம் காரணமாக எல்லா நேரங்களிலும் தமது வீட்டுக் கதவுகளையும், யன்னல்களையும் பூட்டி வைக்கின்றார்கள். குப்பை கொட்ட தொடங்கி ஏறக்குறைய ஒரு வருடத்தின் பின்பு பிரதேசவாசிகளுடைய பிள்ளைகள் டெங்குவினால் பீடிக்கப்பட்டனர். வன ஜீவராசிகளின் அச்சுறுத்தல் காரணமாக பிள்ளைகள் தமது வீட்டுக்கு வெளியே விளையாட முடியாமல் உள்ளனர். கடந்த வாரத்தில் குப்பைகளில் இருந்து உணவைப் பெற்றுக் கொள்ள வந்த ஒரு காட்டு யானை தாக்கி இரண்டு பெண்கள் கொல்லப்பட்டனர்.

5000 மக்களை கொண்ட சீதாபுர என்ற சேரிப்புறம் ஒன்றே குப்பைகளை கொட்டுவதற்கு இருக்கின்ற ஒரே ஒரு இடமாகும் என பிரதேச சபை கோருகிறது. மேலும் குப்பைகளை கொட்டுவதற்கு தமக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் ஒன்று உள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

பிரதேசவாசிகளின் ஒரு குழுவினர் பொது தொல்லைகளுக்கான வழக்கு நடவடிக்கையொன்றை பிரதேச சபைக்கு எதிராக கொண்டு வந்தனர். நீர் இவ் வழக்கை விசாரிக்கும் நீதிபதி ஆவீர். இந்த சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள முரண்பாடான பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்து வைப்பீர் என விளக்குக.

4. சுற்றாடல் நீதி என்ற கோட்பாடு பெருமளவில் வருமானம் குறைந்த மக்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் மீது சுற்றாடலை மாசுபடுத்தும் கைத்தொழில்துறையினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களினால் ஐக்கிய அமெரிக்காவில் தோன்றிய ஒரு கோட்பாடு ஆகும். எவ்வாறாயினும், இலங்கை போன்ற நாடுகளில் இந்த கோட்பாடு சுற்றாடல் தொடர்பான அனைத்து பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகிய அனைத்திற்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

   இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? இலங்கை மற்றும் ஏனைய நியாயாதிக்கங்களில் உள்ள தீர்ப்புச் சட்டத்தின் பின்னணியில் உமது நிலைப்பாட்டை விளக்குக.

5. மனித செயற்பாடுகளால் சுற்றாடல் மீது ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளை ஒழுங்குபடுத்தவும் கையாளவும் 1988 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான தேசிய சுற்றாடல் சட்டத்தின் மாசுபடுத்தலை கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான ஏற்பாடுகள் மிக முக்கியமாக அமைகின்றன. எவ்வாறாயினும், இந்த ஏற்பாடுகள் அவற்றின் நோக்கத்தை பூர்த்தி செய்ய தவறியுள்ளதுடன் அவ் ஏற்பாடுகளை மேலும் பயனுடையதாக்க உடனடி திருத்தங்கள் மேற்கொள்வதற்கான தேவையொன்று ஏற்பட்டுள்ளது.

   (அ) மாசடைதலைக் கட்டுப்படுத்த மற்றும்

   (ஆ) சுற்றாடல் தாக்க மதிப்பீடு

   என்பன தொடர்பான ஏற்பாடுகளின் பலவீனங்களை இனங்காண்க. அத்துடன் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகிய விடயங்களில் அதிகூடிய வினைதிறனை உறுதிப்படுத்த அவ் ஏற்பாடுகளை எவ்வாறு திருத்தலாம் என்பது பற்றி உமது பரிந்துரைகளை வழங்குக.

பதிப்புரிமை பெற்றது